# தமிழ்நாடு மின்ஊழியர் மத்திய அமைப்பு

பதிவு எண் :158/CPT அங்கீகாரம் பெற்றது இணைப்பு:CITU&EEFI

எண் 27, மசூதி தெரு, சேப்பாக்கம், சென்னை 600 005.

**Telephone No : 044-28548529** **E-mail: coteecitu@gmail.com**
**Fax No : 044-28516574** **Web: www. cotee.org**


**சுற்றறிக்கை எண் 25/2014** **நாள் : 05/11/2014**

**பெறுநர்**

மாநில நிர்வாகிகள்
கிளைச் செயலாளர்கள்
மாநில செயற்குழு உறுப்பினர்கள் மற்றும்
அனைத்து கோட்டச் செயலாளர்கள்

அன்பான தோழரே,

வணக்கம்,

மின் ஊழியர் மத்திய அமைப்பின் இடைக்கால ஸ்தாபன பரிசீலனையொட்டி மாநில செயற்குழு கூட்டம் அக்டோபர் 25, 26 தேதிகளில் சென்னையில் மாநிலத் தலைவர் தோழர் கே. விஜயன் தலைமையில் நடைபெற்றது.

அக்கூட்டத்தில் தமிழ் மாநில சிஐடியு - வின் தலைவர் தோழர் அ. சவுந்தரராசன், எம்.எல்.ஏ. தோழர் ஆர். கருமலையான் சிஐடியு துணைப் பொதுச் செயலாளர், சங்கத்தின் பொதுச் செயலாளர் தோழர் எஸ்.எஸ். சுப்பிரமணியன் பொருளாளர் ஈ. அந்தோணி, துணை பொதுச்செயலாளர்கள் எம். வெங்கடேசன், எஸ். ராஜேந்திரன், வி. இளங்கோ, கே. ரவிச்சந்திரன் உள்ளிட்ட 80 தோழர்கள் கலந்து கொண்டனர்.

அக்கூட்டத்தில் திருப்பத்தூர், தர்மபுரி, வேலூர், குந்தா, காடம்பாறை, கடலூர், விருதுநகர், உடுமலை, மேட்டூர், கோபி, நாமக்கல்,ராமநாதபுரம், மதுரை புறநகர், கோவை வடக்கு ஆகிய வட்டங்களில் இருந்து பிரதிநிதிகள் கலந்து கொள்ளவில்லை என்பது கவலையோடு பரிசீலிக்க வேண்டியுள்ளது.

அக்கூட்டத்தில் சிஐடியு தமிழ் மாநிலக் குழுவின் தலைவர் தோழர் அ. சவுந்தரராஜன் எம்.எல்.ஏ. அவர்கள் தனது உரையில் இடைக்கால ஸ்தாபன பரிசீலனை நடத்த வேண்டியதன் அவசியம் ஸ்தாபன முன்னேற்றம் மற்றும் விரிவாக்கம் அதை தொழிலாளர்கள் மத்தியில் கொண்டு செல்வதில் உள்ள சிக்கல், பொதுவான அணுகுமுறை, உறுப்பினர் சேர்ப்போடு விரிவான பிரச்சாரம் போன்றவைகள் சம்மந்தமாக எடுத்துரைத்தார். ஆட்சிகள் மாறும் போது உறுப்பினர்கள் எண்ணிக்கையில் மாற்றம், மேலும், மத்திய அமைப்பில் நிரந்தர தொழிலாளர்கள் 30 சதவீதம் உள்ளதை உத்தரவாதப்படுத்தி அதை மேலும் விரிவாக்கம் செய்வது சம்மந்தமாகவும், இந்த 30 சதவீதமானது மின் அரங்கத்தில் குறிப்பிடத்தக்க வளர்ச்சி என்ற போதிலும் 30 சதவீதமானவர்கள் அசையவேண்டும் என்பது தான் முக்கியம் என்றும் குறிப்பிட்டார். தொழிலாளர் சார்பாகத் தான் நாம் பேசுகிறோம் என்ற உணர்வு தொழிலாளர்கள் மத்தியில் இருக்க வேண்டும் என்றும், நிர்வாகத்தின் நடவடிக்கையை நாம் கண்டு கொள்ளாவிட்டால் தொழிலாளி நம்மை விட்டு விலகிட நேரும் என்றும் குறிப்பிட்டார்.

புதிய தாராளமய சூழலில் ஊழல் என்பது சர்வசாதாரணமாகிவிட்டது. பொதுத்துறை படிப்படியாக தனியார் வசப்படும் வகையில் அரசின் நடவடிக்கை உள்ளது. பன்னாட்டு நிறுவனமான நோக்கியா ஆலை மூடலால் 12000 பேர் வேலை போய்விட்டது என்பன போன்றவைகளை குறிப்பிட்டு இவைகளுக்கு எதிராக வலுவான போராட்ட இயக்கங்கள் தேவைப்படுவது பற்றியும். அவைகளை எதிர்கொள்ளும் வகையில் நமது ஸ்தாபனத்தை வலுவாக கட்ட வேண்டிய அவசியத்தையும் விளக்கினார்.

தலைவர் தனது உரையில் விரிவாக்கம் சம்மந்தமாகவும், உறுப்பினர் பலம் பற்றியும், தொழிலாளர் நல சட்டங்கள் திருத்தம் பற்றியும் பேசியதோடு பத்திரிக்கை படிப்பது, வாங்குவது பற்றியும் குறிப்பிட்டதோடு மத்திய அமைப்பின் இன்றைய பணிகள், நமது உறுப்பினர் பலம் பற்றியும் தனது உரையில் குறிப்பிட்டார்.

சிஐடியு வின் மாநில துணைப் பொதுச்செயலாளர் தோழர் ஆர். கருமலையான் அவர்கள் தனது உரையில் ஸ்தாபனம் விரிவாக்கம் சம்மந்தமாக பெல்லாரியில் நடைபெற்ற சிஐடியு வின் அகில இந்திய பொது குழு முடிவுகளைப் பற்றியும், அவை மாவட்டம், சம்மேளனங்களில் கொண்டு செல்லப்பட்டுள்ளது பற்றியும் விளக்கினார். மேலும் தனது உரையில் பொதுத்துறை நிறுவனங்களில் பங்குகளை 48 ஆயிரம் கோடி ரூபாய் அளவிற்கு பங்கு விற்பனைக்கான திட்டம் உள்ளது பற்றியும், நிதி நிலை, மக்களை ஏமாற்றுகின்ற வகையில் அமைந்துள்ளது என்றும், தொழிலாளர் நல சட்டம் திருத்தங்கள் சம்மந்தமாகவும் விளக்கினார். நாடாளுமன்ற தேர்தலில் இடதுசாரிகளின் பின்னடைவு என்பது உழைக்கும் மக்களுக்கான அரண் தகர்க்கப்பட்டுள்ளது என்றும் பால் கட்டணம், மின் கட்டணம் உயர்வு சம்மந்தமாகவும், பிரிமீயம் ரயில் கட்டணம் அதன் மூலமாக கட்டணம் கூடுவது சம்மந்தமாகவும் மத்திய அரசு பின்பற்றும் கொள்கைகள், விவசாயிகள், மக்களை பாதிப்பதை அவர்கள் மத்தியில் கொண்டு செல்லும் வகையில் மத்திய அமைப்பு முன் முயற்சி எடுத்து நடத்தவுள்ள கருத்தரங்குகள் வெற்றிகரமாக அமைய வேண்டியதன் அவசியத்தையும் விளக்கினார்.

மத்திய அமைப்பின் பொதுச் செயலாளர் தோழர் எஸ்.எஸ். சுப்ரமணியன் சென்ற பொதுக்குழு கூட்டத்திற்கு பின்னர் நடைபெற்ற பணிகள் சம்மந்தமாகவும், ஸ்தாபனம் இடைக்கால பரிசீலனை சம்மந்தமாக ஒரு குறிப்பினையும் முன் வைத்தார். நடைபெற்ற பணிகள் சம்மந்தமாக குறிப்பிடும் போது. 20.8.2014 அன்று நடைபெற மாநில அளவிலான ஆர்ப்பாட்டம் அதற்கான விரிவான தயாரிப்பு, போன்றவைகள் செய்ததினால் அவ்ஆர்ப்பாட்டத்தில் கணிசமான எண்ணிக்கையில் ஊழியர்கள் கலந்து கொண்டது அதனையொட்டி வாரிய ஊழியர்களின் பல்வேறு கோரிக்கைகள் மீது பேச்சு வார்த்தையும், சாதகமான முடிவுகள் சில வெளிவந்ததையும் குறிப்பிட்டதோடு அடுத்த போராட்ட இயக்கமான 14.10.2014 அன்று தேசிய மின்சார பொறியாளர், தொழிலாளர் கூட்டமைப்பின் சார்பாக நடத்திய திட்ட மட்ட ஆர்ப்பாட்டம், அதில் கணிசமான தோழர்கள் கலந்து கொண்டது, தேசிய அறை கூவலை மின் அரங்கத்தில் அமல்படுத்தும் பொழுது தொழிற்சங்கங்கள் மத்தியில் ஏற்பட்டுள்ள ஒற்றுமையை கட்டிக்காக்க வேண்டிய அவசியத்தையும் குறிப்பிட்டார்.

மேலும் முன்னணி ஊழியர்களை பயிற்றுவிக்கும் விதமாக மண்டல வாரியாக நடைபெற்ற வகுப்புகள் அதில் கலந்து கொண்ட தோழர்களின் எண்ணிக்கை, வகுப்பை நடத்தாக விழுப்புரம் மண்டலமும் உடனடியாக நடத்த வேண்டியதன் அவசியத்தையும் இவை போன்ற வகுப்புகளை குறுகிய கால இடைவெளியில் நடத்த திட்டமிட வேண்டியுள்ளதையும் குறிப்பிட்டார்.

மேலும் அனல் ஆலோசனைக் குழு அதன் நடவடிக்கைகள் திட்ட வாரியாக நடத்திய இயக்கங்கள், மின்வாரிய தலைமையகத்திற்கு முன்னால் நடந்த வேண்டிய இயக்கத்தின் அவசியத்தையும் குறிப்பிட்ட தோடு இந்த காலத்தில் ஏற்பட்ட புனல் ஒப்பந்தம், கணக்கீட்டுப்பிரிவு ஊழியர்கள் குழுக் கூட்டம், கணக்கீட்டு அதிகாரிகளின் ஆலோசனைக் குழு கூட்டம் சம்மந்தமாகவும் விளக்கியதோடு, கணக்கீட்டுப்பிரிவு, நிர்வாகப்பிரிவுக்கு மேலும் பதவி உயர்வு வாய்ப்புகளை உருவாக்கிட வேண்டும் என்பன உள்ளிட்ட கோரிக்கைகள் அடங்கிய கடிதத்தை வாரியத்திற்கு அளித்தது. பதவி உயர்வில் உள்ள ஏற்ற தாழ்வுகளை இம்மாத இறுதிக்குள் வாரியம் ஒரு ஆலோசனையை தயாரித்து நம்மிடம் அளித்து நமது கருத்துக்களோடு இறுதிப்படுத்த உள்ளதையும் குறிப்பிட்டார். மேலும் களப்பணி பிரிவு ஊழியர்களின் குழுக் கூட்டம் நடைபெற்றது. இரு வழிப்பாதையில் உள்ள சில சரத்துக்களை மாற்றி அமைக்கும் விதமாக வாரியத்தால் அமைக்கப்பட்ட குழு ஆலோசனை அறிக்கை அளித்துள்ளதையும், அதன் மீது நமது கருத்துக்களை சொல்ல வேண்டியுள்ளதையும் குறிப்பிட்டார். *(இது தொடர்பாக 4.11.2014 அன்று களப்பிரிவு ஊழியர்களுக்கான குழு கூட்டம் நடைபெற்றது. குழுவின் ஆலோசனைகள் தனியாக அனுப்பி வைக்கப்படும்.)*

மேலும் சென்னைக்கு அருகாமையில் வள்ளூரில் தேசிய அனல் மின் கழகமும், மின்சார வாரியமும் இணைந்து துவங்கியுள்ள உற்பத்தி நிலையத்தில் ஒப்பந்த தொழிலாளர்கள் உள்ளிட்ட ஊழியர்களை திரட்டி இருமுறை நடத்திய கூட்டம் சம்மந்தமாகவும், உழைக்கம் பெண்கள் ஒருங்கிணைப்புக்குழுவின் மாநிலக்குழு கூட்டம் நடைபெற்றது. அதன் செயல்பாடு, அக்குழுவின் மாநில மாநாடு நடத்திட வேண்டிய அவசியத்தையும் குறிப்பிட்டார். மேலும் தமிழ்நாடு மின் துறை பொறியாளர் அமைப்பு, ஓய்வு பெற்றோர் நல அமைப்பு, அதன் செயல்பாடுகள் 2013 - 14 ஆம் ஆண்டு போனஸ் கோரிக்கை, அதனையொட்டி நாம் நடத்திய இயக்கம், போனஸ் அறிவிப்பில், கருணைத் தொகையில் ஏற்பட்ட சிறு உயர்வு ஆகியவைகளை நடைபெற்ற பணிகளாக அறிக்கையில் குறிப்பிட்டார். மேலும் ஒப்பந்த தொழிலாளர்கள் சுமார் 6000 க்கும் மேற்பட்டவர்கள் பணியாற்றும் போதிலும் 103 ஒப்பந்த தொழிலாளர்கள் மட்டுமே பணியாற்றுவதாக வாரியம் குறிப்பிட்டுள்ளதை ஏற்றுக் கொள்ள இயலாது என்றும், அதன் அடிப்படையின் அனல், புனல், பொதுகட்டுமான வட்டம், விநியோகப் பகுதிகளில் பணியாளர்கள் ஒப்பந்த தொழிலாளிகளை கண்டு அவர்களுக்கு கருணைத் தொகை வழங்க வேண்டும் என்று வாரியத்தை வலியுறுத்தியதையும் சுட்டிக்காட்டினர்.

நடைபெற்ற பணிகளோடு ஸ்தாபன இடைக்கால பரிசீலனை சம்மந்தமாக ஓர் அறிக்கையும் முன்வைக்கப்பட்டது. அந்த அறிக்கையில் உறுப்பினர் புதுப்பித்தலில் ஏற்பட்டுள்ள இடைவெளி சம்மந்தமாகவும், இருக்கின்ற உறுப்பினர்களை கெட்டிப்படுத்தி விரிவாக்கம் என்பதை உத்தரவாதப்படுத்த வேண்டும் என்ற நோக்கத்தோடு மாநில மையம், தகவல் தொடர்பு, வட்டங்களின் செயல்பாடு, மண்டலங்களின் செயல்பாடு, கோட்டங்களின் செயல்பாடு, மத்திய அமைப்பின் மாநில நிர்வாகிகளுடைய பணிகள், கிளைக் கணக்கு பராமரிப்பு, கிளை பேரவைகள், மின்கதிர், சிஐடியு செய்தி, குடும்ப நலப்பாதுகாப்பு, கலைக்குழுவின் செயல்பாடு, ஆகியவைகள் சம்மந்தமாக ஒரு குறிப்பினையும் விவாதத்திற்கு வைக்கப்பட்டது.

**அறிக்கையின் மீதும் 37 தோழர்கள் விவாதத்தில் பங்கு பெற்றனர் அதன் பின்னர் கீழ்கண்ட முடிவுகள் எடுக்கப்பட்டன.**

1. தேசிய மின்சார தொழிலாளர் மற்றும் பொறியாளர் கூட்டமைப்பின் அறைகூவலின் அடிப்படையில் டெல்லியில் நடைபெறும் பாராளுமன்றம் நோக்கி நடைபெறும் பேரணியில் மின் ஊழியர் மத்திய அமைப்பைச் சேர்ந்தவர்கள் 250 ஊழியர்கள் கலந்து கொள்வது என்று முடிவு செய்யப்பட்டது. (திட்டங்களுக்கான கோட்டா இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது)

2. முன்னணி ஊழியர்களுக்கான வகுப்பை நடத்தாத விழுப்புரம் மண்டலம் உடனடியாக திட்டமிட்டு அந்த வகுப்பினை நடத்திட வேண்டும். ஒழுங்கு நடவடிக்கை, பாதுகாப்பு விதிகள், கிளை, கோட்ட நிர்வாகிகள் செயல்பாடு ஆகியவைகளை மையமாக வைத்து 2015 ஆம் ஆண்டு முற்பகுதியில் மண்டல வாரியான வகுப்பினை நடத்திடுவது.

3. அனல் ஆலோசனைக் கூட்ட குழு முடிவை அங்கீகரித்து அங்கு பணியாற்றும் ஒப்பந்த தொழிலாளர்கள் உள்ளிட்ட தொழிலாளர்களின் கோரிக்கையை முன் வைத்து 28.11.2014 அன்று மின் வாரியம் தலைமையகம் முன்பு ஆர்ப்பாட்டம் நடத்திடுவது.

4. ஒப்பந்த தொழிலாளிகளை அடையாளங்கண்டு கருணைத் தொகை வழங்கிட வேண்டும் என்ற கோரிக்கையின் மீது ஒப்பந்த தொழிலாளர்கள் முழுவதுமாக கலந்து கொள்ளக் கூடிய பேரவைக் கூட்டங்கள் 13.11.2014 அன்று நடத்துவது. அதே கோரிக்கைகளை முன் வைத்து 11.12.2014 அன்று திட்டமட்டத்தில் ஆர்ப்பாட்டம் நடத்திடுவது, ஒப்பந்த தொழிலாளர்கள் பேரவையில் கலந்து கொள்ளும் ஒப்பந்த தொழிலாளர்களின் எண்ணிக்கையை உடன் மாநில மையத்திற்கு அனுப்பி வைத்திடுவது.

5. மின் நுகர்வோர்களையும், மின் வாரிய ஊழியர்களையும் பாதிக்கும் மின்சார சட்டத்தில் தேவையான மாற்றங்களை உருவாக்குவது. மின்சார தொழில் நிரந்தர தன்மை வாய்ந்த பணிகளில் ஒப்பந்த, அவுட்சோர்சிங் முறையை அமல்படுத்தி உழைப்புச் சுரண்டலை அரங்கேற்றுவதை தமிழக மக்கள் மத்தியில் கொண்டு செல்லும் வகையில் சிஐடியு, இந்திய மின் ஊழியர் கூட்டமைப்பு, விவசாய தொழிலாளர் சங்கம், விவசாயிகள் சங்கம் உட்பட நான்கும் இணைந்து சென்னை, கோவை, மதுரை, திருவண்ணாமலை, ஆகிய இடங்களில் மின் வாரிய ஊழியர்கள், விவசாயிகள், சிறு குறு தொழில் புரிவோர்கள், ஆகியோர்களைக் கொண்ட கருத்தரங்கை நடத்துவது அதன் முதல் கட்டமாக திருவண்ணாமலை கருத்தரங்கை நவம்பர் இறுதிக்குள் நடத்துவது என்றும் முடிவு செய்யப்பட்டது.

6. கணக்கீட்டுப்பிரிவு, நிர்வாகப்பிரிவு ஆகிய பிரிவு ஊழியர்களுக்கும், கணக்குப் பிரிவு, ஊழியர்களுக்கும் பதவி உயர்வில் உள்ள ஏற்றத் தாழ்வை சரி செய்யும் விதமாக மின் வாரியத்திற்கு கொடுத்துள்ள கோரிக்கையின் மீது தொடர்ந்து பேசுவது தேவைப்பட்டால் அப்பகுதி ஊழியர்களை திரட்டி இயக்கத்திற்குச் செல்வது.

7. களப்பணி ஊழியர்கள் பதவி உயர்வில் இரு வழிப்பாதையில் உள்ள குறைகள் அகற்றும் விதமாக அமைக்கப்பட்ட கமிட்டியின் அறிக்கையைப் கேட்டுப் பெற்று பேச்சு வார்த்தை நடத்தி முடிவுக்கு கொண்டு வருவது.

8. வள்ளூரில் அமைந்துள்ள தேசிய அனல் மின் கழகமும், மின் வாரியமும் இணைந்து துவங்கியுள்ள மின் நிலையத்தில் பணியாற்றும் ஊழியர்களுக்கு அடிப்படை வசதிகளான குடி தண்ணீர், கழிவறை போன்றவைகளை உடனடியாக அமைத்து தர மின் ஊழியர் மத்திய அமைப்பு தேசிய அனல் மின் நிலையத்திற்கு கடிதம் எழுதுவது.

9. உழைக்கும் பெண்கள் ஒருங்கிணைப்புக்குழுவின் 8 வது மாநில மாநாட்டை விழுப்புரத்தில் நடத்துவது. அதற்கு முன்பாக கிளைகளில் உள்ள உழைக்கும் பெண்களை திரட்டி கூட்டங்களை நடத்துவது.

10. வெண்மணி நினைவாலாய நிதி வசூலை வேகமாக முடித்து அத்தொகைகளை மாநில மையத்திற்கு அனுப்புவது, அதையொட்டி மாவட்டவாரியாக இரும்பு சேகரிப்பு இயக்கத்தில் முழுவதுமாக ஈடுபடுவது.

11. டெல்லி அகில இந்திய மையத்தில் இளம் தலைமை தயாரிப்பு, கூட்டத்தில், சிஐடியு சார்பாகவும், இ.இ.எப்.ஐ. சார்பாகவும் தோழர் எஸ். உமாநாத் சிவகங்கை, தோழர் டி. கோபாலா கிருஷ்ணன், திருப்பூர் ஆகிய இரு தோழர்கள் கலந்து கொள்வது என்றும் முடிவு செய்யப்பட்டது.

12. நவம்பர் மாத இறுதியில் டெல்லியில் நடைபெறும் தீண்டாமை ஒழிப்பு முன்னணி கூட்டத்தில் தோழர் டி. பழனிவேலு, கடலூர் அவர்கள் கலந்து கொள்வது என்றும் முடிவும் செய்யப்பட்டது.

13. *ஸ்தாபன இடைக்கால பரிசீலனைக்கு முன் வைக்கப்பட்ட அறிக்கையின் மீது வந்த விவாதத்தையொட்டி கீழ்க்கண்ட முடிவுகள் எடுக்கப்பட்டன. அதாவது மின் ஊழியர் மத்திய அமைப்பில் உறுப்பினராக உள்ளவர்களை உயிரோட்டமாக செயல்பட வைத்து விரிவாக்கத்தை உத்தரவாதப்படுத்திட*

அ) அனைத்து வட்டங்களிலும் செயல்படும் திட்டமையத்தை பலப்படுத்துவதோடு இல்லாத திட்டங்களில் உருவாக்க வேண்டும்

ஆ) அனைத்து கோட்டங்களிலும் கோட்டக் குழுக்களை இனியும் காலதாமதமின்றி செயல்பட வைப்பது, கோட்டக் குழுவின் பட்டியலை மண்டல செயலாளருக்கும் (கோட்ட தலைவர், செயலாளர், துணை தலைவர், துணை செயலாளர் மற்றும் 6 பேர் கொண்ட செயற்குழு பட்டியல்) மாநில மையத்திற்கு தருவது.

இ) மாதத்திற்கு ஒரு முறை கிளைக் கூட்டத்தை நடத்துவது, இரண்டு மாதத்திற்கு ஒரு முறை நடைபெறும் கிளைக் கூட்டத்தில் வரவு செலவு கணக்கு வைப்பதை உத்தரவாதப்படுத்துவது. கிளைக்கு பொறுப்பான மாநில நிர்வாகிகள் இதை கண்காணித்திட வேண்டும்.

ஈ) மூன்று மாதத்திற்கு ஒரு முறை மண்டலக்குழுக் கூட்டங்களை கூட்டுவது, மண்டலக்குழு கூட்டங்களில் மண்டலத்திற்கு உட்பட்ட கிளையின் செயல்பாட்டை உத்தரவாதப்படுத்துவது.

உ) மையத்தில் அமைக்கப்பட்டுள்ள அனைத்து கேட்டகிரிக் குழுக்களையும் மாநில மையம் முயற்சி எடுத்து கூட்டுவது. அதே சமயம் மாநில மையம் அமைத்துள்ள கேட்டகிரிக் குழுக்களை வட்ட அளவில் வைத்து செயல்பட வைப்பது, மண்டல செயலாளர்கள் அதை கண்காணிப்பது.

ஊ) மாநில மையத்தின் வழிகாட்டுதலோடு மண்டல அளவில் நிர்வாகிகளுக்கான தொழிற்சங்க பயிற்சி பட்டறை நடத்துவது.

எ) செய்திகளை பரவலாக கொண்டு செல்லும் வகையில் மத்திய அமைப்பில் அனுப்பிடும் சுற்றறிக்கைகளை கோட்டமட்டத்திற்கு கொண்டு செல்வதை கிளைகள், உத்தரவாதப்படுத்துவது.

ஏ) இயக்கம், தகவல் மற்றும் கடிதங்கள் தொடர்பாக (கம்ப்யூட்டர், குரூப் எஸ்.எம்.எஸ்., இணையதளம்) புதிய தொழில் நுட்பங்களை மண்டலம் மற்றும் கிளைகளில் கையாள்வது.

ஐ) மின்கதிர் வாசிப்பை உறுதிப்படுத்தும் வகையில் வட்டங்கள் தோறும் மின்கதிர் வாசகர் வட்டத்தை உருவாக்குவது.

ஒ) போராட்ட செய்திகளை தாங்கி வரும் சிஐடியு செய்தியை மின் அரங்கத்தில் பரவலாக கொண்டு செல்லும் வகையில் சுமார் 2000 சிஐடியு செய்தியை திட்டங்களுக்கு பகிர்ந்து அளித்து 2015 முதல் அமல்படுத்துவது. (பட்டியல் இணைக்கப்பட்டுள்ளது)

ஔ) இவைகளின் அடிப்படையில் 2014 ஆம் ஆண்டு உறுப்பினர் எண்ணிக்கையை 25,000க்கு கொண்டு செல்வது 2015 ஆம் ஆண்டு உறுப்பினர் எண்ணிக்கையை 30,000 ஆக உயர்த்துவது.

மிக குறுகிய கால இடைவெளியில் மாநில செயற்குழுவை நடத்திய தென் சென்னை மின் வட்டக் கிளைக்கு மத்திய அமைப்பு பாராட்டுக்களை தெரிவித்துக் கொள்கிறது.

தோழர்களே

செயற்குழுவில் வந்த விவாதங்கள், அதன் அடிப்படையில் எடுக்கப்பட்ட முடிவுகளை, அமல்படுத்த அனைத்து கோட்டச் செயலாளர்களும், கிளைச் செயலாளர்களும் உடனடியாக கோட்ட மட்டக் குழுக் கூட்டத்தை கூட்டி விவாதிக்க வேண்டும். நாம் செய்த பணிகளுக்கும், நமது உறுப்பினர் எண்ணிக்கைக்கும் உள்ள இடைவெளியை அகற்ற முயற்சி எடுக்க வேண்டும்.

நமது அமைப்பை இன்னும் ஜனநாயக ரீதியில் செயல்படுத்தி, உறுப்பினர் எண்ணிக்கையை உயர்த்துவதில், கணக்குகளை பராமரிப்பதில், நீங்கள் செயலாற்ற வேண்டும் எனக் கேட்டுக் கொள்கிறோம்.

தோழமையுள்ள

**(எஸ்.எஸ். சுப்பிரமணியன்)**
பொதுச் செயலாளர்

## டெல்லி பேரணி, சிஐடியு செய்தி விற்பனை திட்ட வாரியாக எண்ணிக்கை விபரங்கள்

| கிளைகள் | | டெல்லி பேரணியில் கலந்து கொள்ள வேண்டியவர்கள் | சிஐடியு செய்தி விற்பனை |
|---|---|---|---|
| **சென்னை வடக்கு மண்டலம்** | | | |
| 1. | வடசென்னை | 10 | 70 |
| 2. | மத்திய சென்னை | 10 | 70 |
| 3. | மேற்கு சென்னை | 10 | 70 |
| **சென்னை தெற்கு மண்டலம்** | | | |
| 4. | தென்சென்னை | 10 | 70 |
| 5. | செங்கல்பட்டு | 5 | 30 |
| 6. | காஞ்சிபுரம் | 5 | 50 |
| **வேலூர் மண்டலம்** | | | |
| 7. | வேலூர் | 4 | 30 |
| 8. | திருப்பத்தூர் | 4 | 30 |
| 9. | தர்மபுரி | 4 | 30 |
| **விழுப்புரம் மண்டலம்** | | | |
| 10. | விழுப்புரம் | 10 | 70 |
| 11. | கடலூர் | 10 | 70 |
| 12. | திருவண்ணாமலை | 10 | 70 |
| 13. | கள்ளக்குறிச்சி | 6 | 30 |
| **திருச்சி மண்டலம்** | | | |
| 14. | பெரம்பலூர் | 4 | 30 |
| 15. | திருச்சி/மாநகர் | 4 | 40 |
| 16. | கரூர் | 4 | 30 |
| 17. | புதுக்கோட்டை | 4 | 30 |
| 18. | தஞ்சாவூர் | 4 | 40 |
| 19. | நாகப்பட்டிணம் | 4 | 40 |
| **மதுரை மண்டலம்** | | | |
| 20. | மதுரை | 5 | 50 |
| 21. | மதுரை மாநகர் | 4 | 20 |
| 22. | தேனி | 4 | 30 |
| 23. | ராமநாதபுரம் | 4 | 30 |
| 24. | சிவகங்கை | 5 | 50 |
| 25. | திண்டுக்கல் | 4 | 40 |

| | | |
|---|---|---|
| **திருநெல்வேலி மண்டலம்** | | |
| 26. விருதுநகர் | 4 | 30 |
| 27. திருநெல்வேலி | 10 | 70 |
| 28. தூத்துக்குடி | 10 | 70 |
| 29. கன்னியாகுமரி | 5 | 30 |
| **கோவை மண்டலம்** | | |
| 30. நீலகிரி | 4 | 30 |
| 31. கோவைதெற்கு | 5 | 50 |
| 32. கோவைவடக்கு | 6 | 40 |
| 33. கோவை மாநகர் | 5 | 50 |
| 34. திருப்பூர் | 5 | 50 |
| 35. உடுமலைபேட்டை | 4 | 30 |
| **ஈரோடு மண்டலம்** | | |
| 36. சேலம் | 4 | 30 |
| 37. மேட்டூர் | 4 | 30 |
| 38. ஈரோடு | 5 | 50 |
| 39. கோபி | 4 | 30 |
| 40. நாமக்கல் | 4 | 30 |
| **அனல் மின்நிலையங்கள்** | | |
| 41. வடசென்னை அனல் | 4 | 40 |
| 42. எண்ணூார் | 4 | 40 |
| 43. மேட்டூர் அனல் | 4 | 40 |
| 44. தூத்துக்குடி அனல் | 4 | 40 |
| **புனல் மின்நிலையங்கள்** | | |
| 45. ஈரோடுஉற்பத்தி | 4 | 20 |
| 46. காடம்பாறை | 4 | 20 |
| 47. குந்தா உற்பத்தி | 4 | 10 |
| 48. நெல்லைஉற்பத்தி | 4 | 10 |
| 49. காற்றாலைபண்ணை | 4 | 15 |
| 50. பொதுகட்டுமான ம் / சென்னை | 4 | 50 |
| 51. பொதுகட்டுமான ம் / சென்னை | 4 | 15 |
| 52. தலைமையகம் | | |
| **மொத்தம்** | **250** | **2040** |
| | | |